DOWNLOADED FROM VAKILSEARCH

<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்</u>
<u>அசல் வழக்கு எண். 244/2021</u>

**2023–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ம் நாள் திங்கட்கிழமை** வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW–1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) கோ. லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜேந்திரன் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : சிங்காரம் | வட்டம் | : குன்னம் |
| கிராமம் | : புதுவேட்டக்குடி | சமயம் | : – |
| சாதி | : – | வயது | : 58/2023 |

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :–**

1. வழக்கு தாக்கல் செய்வதற்கு வழக்கறிஞரை பார்த்து நான் தான் விபரம் சொன்னேன் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்த காலத்தில் பட்டா 1– ஆம் பிரதிவாதியின் பெயரில் இருந்தது என்றால் சரிதான். எனது குடும்பத்தில் நானும், சுப்ரமணியும் ( 2– ஆம் வாதியும்) தான் வாரிசுகள் என்றால் சரிதான். எனக்கும், 2– ஆம் வாதிக்கும் இடையே பாகம் பிரிக்கப்பட்டு விட்டது என்றால் சரிதான். மேற்படி பாகப்பத்திரம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த பாகப்பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. அந்த பாகப்பத்திரத்தில் பொதுவாக இன்னும் சில இடங்கள் பிரிக்கப்படாமல் உள்ளது என்பது பற்றி குறிப்பிடப்பட்டுளதா என்றால் இல்லை. எங்கள் ஊரில் கருப்புடையார் என்ற பெயர் சாமி பெயர் என்பதால் அதிகமானநபர்கள் அந்த பெயரில் உள்ளார்கள் என்றால் சரிதான். எனது தாத்தா கருப்பு உடையாரின் தந்தை பெயர் குண்டப்ப உடையார் என்பதை காண்பிப்பதற்காக ஆவணங்கள் ஏதேனும் எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுளதா என்றால் நான் தாக்கல் செய்துள்ளேன்.

3. எனது தந்தை சிங்காரத்துடன் பிறந்தவர் செல்லமுத்து உடையார் ஆவார். எனது தந்தைக்கும், செல்லமுத்து உடையாருக்கும் இடையே பாகப்பிரிவினை ஏதும் ஏற்படவில்லை. எனது தந்தைக்கும், எனது பெரியப்பா செல்லமுத்து உடையாருக்கும் எவ்வாறு பாகம் பிரிவினை ஏற்பட்டது என்றால் வாய்மொழியாக பாக பிரிவினை செய்து கொண்டார்கள் அது பற்றி எனக்கு நேரிடையாக தெரியும்.

4. எந்த வருடம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் எனக்கு 15 வயது இருக்கும் போது பிரித்துக்கொண்டார்கள். பாகப்பிரிவினை பிரிக்கும் போது யார் யாரை வைத்து பிரித்தார்கள் என்றால் எனது தாய் மாமா சுந்தரத்து உடையார் உடன் இருந்தார். எனது தந்தை மற்றும் பெரியப்பா பெயரில் பாகப்பிரிவினைக்கு பிறகு தனிப்பட்டா வாங்கப்பட்டதா என்றால் சில இடங்களுக்கு வாங்கப்பட்டது. சில இடங்களுக்கு பட்டா வாங்கப்படவில்லை.

5. மேற்படி எனது தந்தை பெயரில் சில இடங்களுக்கு தனி பட்டா வாங்கப்பட்டதை பற்றியும், சில இடங்களுக்கு தனிப்பட்டா பெறாதது பற்றியும், எனது தந்தை சிங்காரத்திற்கும், செல்லமுத்து உடையாருக்கும் இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினையின் போது நான் உடன் இருந்தேன் என்ற விவரங்களை எனது வழக்குரையிலோ அல்லது முதன்மை வாக்குமூலத்திலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன்.

6. எந்த எந்த சொத்துக்கு எனது தந்தை பெயரிலும், பெரியப்பா பெயரிலும் கூட்டுப்பட்டா வழங்கப்பட்டது என்ற விபரம் சொல்ல முடியுமா என்றால் சர்வே எண். 207/20–ல் 21 செண்ட் மற்றும் 207/11 –ல் 9 செண்ட் ஆகியவை கூட்டுப்பட்டாவில் இருந்து வருகிறது. எனக்கும், எனது தம்பிக்கும் இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் சர்வே எண். 207/20 ல் காட்டப்பட்டுள்ளதா என்றால் காட்டப்பட்டுள்ளது அதில் 10 1/2 செண்ட் மட்டும் காட்டியுள்ளோம்.

7. இந்த தாவா சொத்தில் எங்களுக்கு பாத்தியப்படாத சொத்து என்பதால் தான் தாவா சொத்தை எனக்கும், எனது தம்பிக்கும் இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் காட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி பெயரில் பட்டா உள்ளது என்ற விபரம் எனக்கு 2014–ஆம் வருடம் தான் எனக்கு தெரிய வந்தது. பிரதிவாதி மணியக்காரரை வைத்து அளக்க வரும்போது தான் நான் தெரிந்து கொண்டேன்.

8. பிரதிவாதி பெயரில் பட்டா உள்ள விபரம் சர்வேயரை வைத்து அளக்கும் போது தான் தெரியவந்தது என்ற விபரத்தை வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். பிரதிவாதி பெயரில் தவறாக பட்டா வழங்கப்பட்டது குறித்து தாசில்தாரிடம் மனு கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் நான் மாவட்ட ஆட்சியர் வரை மனு கொடுத்துள்ளேன். அவ்வாறு மனு கொடுத்தற்கு ஆதரவாக ஆவணங்கள் ஏதேனும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

9. 1– ஆம் பிரதிவாதியின் அம்மா பெயர் அஞ்சலை என்றால் சரிதான். அவர் பிறந்தது எங்கள் ஊர்தான் என்றால் சரிதான். அஞ்சலையின் அப்பா பெயர் கருப்பு உடையாரா என்று எனக்கு தெரியாது. அஞ்சலையின் உடன் பிறந்தவர்கள் பெண்கள் மட்டும் தான் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

தாவா சொத்து அஞ்சலையில் அப்பாவான கருப்பு உடையார் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

10. அஞ்சலையின் அப்பாவான கருப்பு உடையார் இறந்ததற்கு பிறகு தாவா சொத்துகளை அஞ்சலை தான் அனுபவம் செய்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து 9 செண்ட் நிலத்திற்கு தான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் பட்டாவில் 18 செண்ட் நிலம் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் Sub Division செய்யப்படும் பொழுது எனது இடத்தையும் சேர்த்து பிரதிவாதிகள் Sub Division செய்து கொண்டார்கள்.

11. நான் எனது வழக்குரையில் நான்கெல்லை குறிப்பிட்டுள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் தெரிவித்துள்ளேன். தாவா சொத்தை பொறுத்து நான் தவறாக மதிப்பீடு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1– ஆம் பிரதிவாதி செல்வராஜ் மற்றும் ராமலிங்கம் ஆகியோர் பெயரில் ஒரு வழக்கு தொடர்ந்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கிற்கு பின்னிட்டு தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

12. செல்வராஜ் மற்றும் ராமலிங்கம் ஆகியோர் தூண்டுதலின் பெயரில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றாலும், அவரது பெயரில் பட்டா ஏற்பட்டு வாய்தா செலுத்தி வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு உரிமை அனுபவம் இல்லாததால் தான் பட்டாவை திருத்த நான் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.சொத்து விபரங்களை நான் தெளிவாக குறிப்பிடாததால் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Taken court by in open court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif-cum-Judicial Magistrate,
Kunnam.

DMC KUNNAM